**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 264 of 2023**

Prosecution witness LW 12 (PW7) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 08.07.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.கிரிஸ் | Father Name | : | திரு.புட்டன்னா |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**A2 Present, A1 absent, u/s.317 Crpc petition filed and allowed.**

<u>**முதல் விசாரணை:**</u>

நான் ஏலேசந்திரம் என்ற ஊரில் வசிக்கிறேன் . இதற்கு முன்பு சாட்சி சொன்ன நாகன் தளியை சேர்ந்தவர் . நாகனை எனக்கு 10 வருடங்களாக தெரியும். நாகன் முதலில் CPIM என்ற கட்சியில் இருந்தார் , தற்போது தி.மு.க -வில் உள்ளார். சுமார் 10-15 வருடம் முன்பாக நான் ஸ்டேசனுக்கு போய் இருந்தேன். தளி காவல் நிலையத்திற்கு எங்கள் ஊர் பிரச்சனை சம்மந்தமாக போய் இருந்தேன் . அப்போது கையெழுத்து கேட்டார்கள் , கையெழுத்து போட்டேன். எதற்காக கையெழுத்து கேட்டார்கள் என்ற விவரம் தெரியாது , வழக்கு விவரம் பற்றி எனக்கு தெரியாது . போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நான் போலீசஸ் விசாணையின்போது கடந்த 02.05.1997 ம் தேதி மாலை 5.15 மணிக்கு நானும், நாகனும் பேலகொண்டபள்ளி பஸ்டாப்பில் நின்று கொண்டு இருந்தபோது தளியை நோக்கி Suzuki Samurai என்ற வண்டியை ஓட்டி நாராயணன் சென்றார் என்றும் நடுவில் கோபால் உட்கார்ந்திருந்தார் என்றும் அவருக்கு பின்னார் பெங்களூரை சேர்ந்த விஜி உட்கார்ந்து கொண்டு வந்தார் என்றும் அந்த வண்டியின் பதிவு எண் . KA –05–U5473 வண்டியில் போனதாகவும் , இதற்கு முன்பு 15 நாட்கள் முன்பு மேற்படி நாராயணன் , தளி உள்ள BDO Office எதிரிலுள்ள இலட்சுமணன் Work Shop–ல் பார்த்ததாகவும் அப்பொழுது பெங்களூரை சேர்ந்த விஜி (எ) விஜயகுமார் உடன் இருந்ததாகவும் விசாரித்தபோது விஜியை பற்றி கூறியதாகவும் , ஒரு முக்கிய வேலை காரணமாக வந்துள்ளதாக சொன்னதாகவும் , அதற்கு பின்னிட்டு 02.05.1997 ல் மாலை 5.30 மணியளவில் கோபாலை யாரோ மோட்டர் சைக்கிளில் வந்த இரண்டு நபர்கள் பெரியகோடிப்பள்ளி ரோட்டில் கத்தியால் குத்தி , தலையில் கல்லை போட்டு கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டதாகவும், போலீசாரிடம் வாக்குமூலம் கொடுக்கும் போது 02.05.1997 ம் தேதி இறந்து போன கோபாலை நாராயணன் மற்றும் விஜியுடன் சேர்ந்து பார்த்ததாக சொல்லி விட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மை விவரங்கள் மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால்அது தவறு.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN Digitally signed by VASUDEVAN DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 264 of 2023**

Prosecution witness LW11 (PW6) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 08.07.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.நாகராஜ் | Father's Name | : | திரு.ராமய்யா |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**A2 Present, A1 absent, u/s.317 Crpc petition filed and allowed.**

**முதல் விசாரணை:**

நான் தளி கும்பாரா தெருவில் வசித்து வருகிறேன் . நான் விவசாய வேலை செய்கிறேன். நான் தி.மு.க கட்சியில் இருந்து வருகிறேன். அதனால் அடிக்கடி காவல் நிலையம் போய் வருவது உண்டு . 20 வருடம் முன்பாக போலீசார் என்னை கையெழுத்து போடச் சொன்னார்கள் அதனால் கையெழுத்து போட்டேன். சாட்சி கிரிஸ் என்பரை எனக்கு 25 வருடங்களாக தெரியும். சுமார் 25 வருடங்களுக்கு முன்பாக தானப்பா தம்பி கோபி என்பவர் உடலை போஸ்மார்ட்டம் செய்து அதன்பிறகு அடக்கம் செய்தார்கள் . தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் போஸ்மார்ட்டம் செய்தார்கள் . அவர் எப்படி இறந்து போனார் என்று எனக்கு தெரியாது . கோபி இறப்பதற்கு இரண்டு மாதம் முன்பு அவரை பார்த்தேன். பஸ் டாப்பில் போகும்போது அவரை பார்த்தேன். அவ்வாறு பார்க்கும் போது கோபி தனியாக தான் போய் கொண்டியிருந்தார். கோபி எப்படி இறந்தார் என்ற விவரம் தெரியாது.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலீஸ் விசாரணையின் போது கடந்த 02.05.1997 ம் தேதி மாலை 5.15 மணிக்கு நானும், கிரிசும் பேலகொண்டபள்ளி பஸ்டாப்பில் நின்று கொண்டு இருந்தபோது தளியை நோக்கி Suzuki Samurai வண்டியை ஓட்டி நாராயணன் சென்றார் என்றும் நடுவில் கோபால் உட்கார்ந்திருந்தார் என்றும் அவருக்கு பின்னால் பெங்களூரை சேர்ந்த விஜி உட்கார்ந்து கொண்டு வந்தார் என்றும் அந்த வண்டியின் பதிவு எண். KA- 05-U-5473 வண்டியில் போனதாகவும் , இதற்கு முன்பு 15 நாட்கள் முன்பு மேற்படி நாராயணன் , தளியில் உள்ள BDO Office எதிரிலுள்ள இலட்சுமணன் Work Shop-ல் பார்த்ததாகவும் அப்பொழுது பெங்களூரை சேர்ந்த விஜி (எ) விஜயகுமார் உடன் இருந்ததாகவும் விசாரித்தபோது விஜியை பற்றி கூறியதாகவும் , ஒரு முக்கிய வேலை காரணமாக வந்துள்ளதாக சொன்னதாகவும் , அதற்கு பின்னிட்டு 02.05.1997 ல் மாலை 5.30 மணியளவில் கோபாலை யாரோ மோட்டர் சைக்கிளில் வந்த இரண்டு நபர்கள் பெரியகோடிப்பள்ளி ரோட்டில் கத்தியால் குத்தி , தலையில் கல்லை போட்டு கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டதாகவும், போலீசாரிடம் வாக்குமூலம் கொடுக்கும் போது 02.05.1997 ம் தேதி இறந்து போன கோபாலை நாராயணன் மற்றும் விஜியுடன் சேர்ந்து பார்த்ததாக சொல்லி விட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மை விவரங்கள் மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் அது தவறு.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN